**செ. கு. எண்: 014** **நாள்: 26.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

வாழ்த்துச்செய்தி – 26.1.2020

தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.வி.எஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. வேணு சீனிவாசன் அவர்களின் சிறந்த தொழில் மற்றும் வர்த்தக செயல்பாடுகளை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு அவருக்கு உயரிய விருதான பத்ம பூஷன் விருது அறிவித்த செய்தியை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

அதே போன்று, திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களின் சிறந்த சமூக சேவையினை அங்கீகரித்து அவருக்கும் மத்திய அரசு உயரிய விருதான பத்ம பூஷன் விருது அறிவித்துள்ளது என்ற செய்தியை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

கலைத்துறையில் சிறந்து விளங்கும் கர்நாடக இசைப் பாடகர்கள் திருமதி லலிதா மற்றும் திருமதி சரோஜா சிதம்பரம் ஆகியோருக்கு மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை, சென்னை ஆகிய பெரும் நகரங்களின் வரலாற்று, சமூக மற்றும் கலாச்சார அடையாளங்களின் ஓவியங்களை சிறப்புற தீட்டும் திரு. மனோகர் தேவதாஸ் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல சமூக சேவகர் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களின் சமூக சேவையினை பாராட்டி அவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது நாதஸ்வர இசையால் அனைவரின் உள்ளங்களை கவர்ந்து வரும் திருமதி காலீ ஷாபி மெகபூப் மற்றும் திரு. ஷேக் மெகபூப் சுபானி ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் பிரதீப் தலப்பில் அவர்கள், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக அவருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் விதமாக பத்ம பூஷன் விருதினை பெறும் திரு. வேணு சீனிவாசன் மற்றும் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்; பத்மஸ்ரீ விருதினை பெறும் திருமதி லலிதா மற்றும் திருமதி சரோஜா சிதம்பரம், திரு. மனோகர் தேவதாஸ், திரு. எஸ். ராமகிருஷ்ணன், திருமதி காலீ ஷாபி மெகபூப், திரு.ஷேக் மெகபூப் சுபானி மற்றும் திரு. பிரதீப் தலப்பில் ஆகியோருக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் மேன்மேலும் பல விருதுகளை பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**